ஸ்ரீ

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

1 - MAR 1919



பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

# கூரத்தாழ்வான் வைபவம்.

இஃது,

பெரியகாஞ்சிபுரம்,

விக்டோரியா ராயல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1919.

...லை 0—2—6.

—1—19.

886
1-19

Q22:417
N19
178574

ஸ்ரீரஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:॥

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரேப்யோ நம உக்திமதீமஹே।
யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்தி மங்கலஸூத்ரதாம்॥

# கூரத்தாழ்வான் வைபவம்.

"க்ருஷ்ணைகவிஹாரவநே ஸகாமே ஸஞ்சரதி யஸ்ய பராஶரஸூநோ:
விஷ்ணோ: ஸநாதநஸநாதகஸ்ய வாஸாவஸாவபேக்ஷ்ய பராஶரகௌதமாதே:।
வக்த்ராம்புஜேஷ்வேவ விநேதாநநவேநக்ஷத்ர வதேல்வ ய:
ஸ்ரீவத்ஸாங்கஸூரீவாதநத்ர ஸோ ஹரிமேகமநந்யோ(அ)ய:"

எம்பெருமான் வைபவத்தைப் பேசித்தலைக்கட்டலாம்; எம்பெருமானார் வைபவத்தைப்பேசித் தலைக்கட்டமுடியாதென்பர். எம்பெருமானார் வைபவத்தைப் பேசித்தலைக்கட்டலாம்; கூரத்தாழ்வான் வைபவத்தைப் பேசித்தலைக்கட்ட முடியாதென்பது பரமார்த்தம். இவ்வாழ்வானோடு ஒப்பிடக்கூடியவர்களும் மேம்பட்டவர்களும் முன்னுமவதரித்ததில்லை, பின்னுமவதரிக்கப்போகிறதில்லை. பகவத்ஸங்கல்பத்தாலே இவ்வாழ்வான் தானே மீண்டு மிந்நிலத்திலே திருவவதரிக்கத் திருவுள்ளம்பற்றினாலும் முன்பு அவதரித்த தன்னிலைமையை அநுகரிக்க வல்லரல்லா என்ன வேண்டியிராநின்றது.

புருஷகுணங்களெல்லாவற்றினுஞ்சிறந்த ஸௌசீல்யம், ஆசார்யபக்தி, பகவத்பாரதந்த்ர்யம், ஒப்புயர்வற்ற பாண்டித்யம் முதலியஎண்ணில் பல்குணங்கட்குப் பிறப்பிடமென்னலாம்படி அமைந்த ஆழ்வான் திவ்யசரிதத்தை அநுதிநம் அநுஸந்திப்பது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நித்யாநுஷ்டாநங்களில் நியமேந ப்ரதாநமா

1 - MAR 1919 MADRAS

யிருக்குமாய்த்து. இவருடைய திருக்கல்யாண குணங்களில் சிலவற்றைச் சுருங்கப்பேசி அநுபவித்து ஆநந்திக்க இழிகின்றேன்.

ஆழ்வான் திருவவதாரஸ்தலமாகிய கூரமாநகரில் இவருடைய திருமாளிகை தேவேந்த்ரபவநம் குபேரபவநம் முதலியவற்றையும் அதிசயித்துச் செல்வம் மிக விஞ்சியிருந்தது. திருமாளிகை வாசற்கதவுகளிற் கிண்கிணிகளின் ஓசை யோஜனைதூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்றால் இவரது ஐச்வரியத்தின் வீறு எத்தகையதென்னலாம்! அச்சிறந்த செல்வத்தினால் பல அகிஞ்சநர்களையும் ஸாதுக்களையும்மற்றும் பலரையும் பலவகையாகப் பரிபோஷித்துக்கொண்டு மஹாதார்மிகராயெழுந்தருளியிருந்தார். நாள்தோறும் பெருமாள்கோயிலில் *ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வலபாரிஜாதமான பேரருளாளன் ஸந்நிதியில் இராத்திருவாராதநம் முற்றும் முடிந்து தீர்வைஸாதமும் அமுதுசெய்து பெரியதிருவாசற் கதவுகள் எப்போது மூடப்படுமோ அதன்பிறகுதான் இவருடைய திருமாளிகை வாசற்கதவு மூடப்படுவது வழக்கம். ஒருநாள் பேரருளாளன் ஸந்நிதியில் ஒரு மஹோத்ஸவ நிமித்தத்தினால் இராத்திருவாராதநம்முடிவுபெற விளம்பித்தமையால், [illegible]மானகாலத்தில் திருவாசற்கதவு சாத்தப்படாமலிருக்கச் செய்தேயும் இவர்திருமாளிகைக் காவலர் அதனை அறியாதாராய் நித்திய வழக்கப்படி நியதமான காலத்தில் திருமாளிகை வாசற்கதவுகளைச் சாத்தினர். அவற்றிற் கிண்கிணிகளின் ஓசை ஒருயோஜனை தூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்று முன்னமே கூறப்பட்டதே; அவ்வோசை பேரருளாளனது திருச்செவிகட்கு இலக்காயிற்று.

அதனைத் திருச்செவிசாத்திய பேரருளாளன் தமக்கு அந்தரங்கமாகத் திருவாலவட்டம் வீசிக்கொண்டு தம்முடன் ஒருநீராகக் கலந்து, தான் அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து சோதிவாய் திறந்து வார்த்தைகளருளிச் செய்யும்படி பரமஸாம்யம் பெற்றிருந்த திருக்கச்சி நம்பியைநோக்கி, ‘நம்பீ! இதுவென்? நம்முடைய இராத்திருவாராதநம் முடிவுபெறுவதற்குமுன்னமே நமதுகோயிற் கதவு சாத்தப்படுவதென்?!’ என வினவியருள, “இவ்வோசை இங்குற்றதன்று; நெடுந்தூரத்தினின்றும் கேட்கப்படுகின்றது; கூரத்தாழ்வானுடைய திருமாளிகைச் செல்வத்தின் சிறப்பாம் இது”

என்று நம்பி விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்ட தேவபிரான் புன்முறுவல்செய்து "ஆழ்வானது ஐஸ்வரியமோ நம்மை இங்ஙனே பயக்கிற்று?" எனவுரைத்தருளி வேறு கதைகளைப் பிரஸ்தாவிக்கலாயினன்.

இங்ஙனமாகக் கச்சிநம்பிக்கும் கமலைகேழ்வனுக்கும் நடந்த ஸம்வாதத்தை மறுநாள் ஆழ்வான் கேட்டருளிப் பரமவிரக்தராகித் தமது ஸகலைச்வர்யங்களையும் ஸத்பாத்ரங்களில் விநியோகித்துவிட்டு, தமக்கு தேஹயாத்ராசேஷமாகச் சிறிது சேமித்துவைத்துவிட்டு, இனி ஸதாசார்ய ஸமாச்ரயணம் பண்ணவேணுமென்று முயன்றவளவிலே 'உடையவர் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் இராமாநுச முனியாயினார்' என்று கேட்டருளிப் பெருமகிழ்ச்சியோடே பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காராதிகளை ப்ராபித்துப்பெற்று அவர் திருவடிகளின்கீழே நிழலும் ¶ அடிதாறும் போலே ஒருகாலும் பிரியாமல் தச்சேஷகைங்கர்யராய் ஸாமாந்ய விசேஷசாஸ்த்ர ஸம்ப்ரதாயப்ரவசனங்களே போதுபோக்காக எழுந்தருளியிருக்கும் நாளிலே, நம்பெருமாளுடைய நியமனத்தினால் திருவரங்கப் பெருமாளரையர் கச்சிக்கு எழுந்தருளிப் பேரருளாளனை அருளிச்செயல் இசையாலே உகப்பித்து இராமாநுசனைத் திருவரங்கத்துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகிறவளவிலே தாமுங்கூடவெழுந்தருளித் திருவரங்கமாநகரிலே எம்பெருமானார் திருவடிக்கீழ்வாழ்ந்தருளுங் காலத்திலே எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பிதிருவடிகளிற் சென்று சரமச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை உபதேசிக்கப் பெற்றுமீண்டு மடத்துக்கு எழுந்தருளின வளவிலே இவர் உடையவர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க; உடையவரும் "வாராய் ஆழ்வான்!, சரமச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி 'இப்பரமரஹஸ்யார்த்தத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக்கொண்டு போரும்' என்று நியமித்தருள; 'அடியேன் பரமபாகவதரான கூரத்தாழ்வானொருவர்க்குமாத்திரம் சொல்லாதிருக்க வொண்ணாதே' என்று நான் விண்ணப்பஞ்செய்ய, 'ஆழ்வானுக்கு இவ்வர்த்தங்

---

¶ அடிதாறு-பாதரேகை.

(A22:CN) 7119

கேட்கஅதிகாரமுண்டேயாகிலும், பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தை அறிந்து ஒரு ஸம்வத்ஸரம் ஶுஶ்ரூஷைகொண்டுசொல்லும்' என்று நியமித்தருளினார்'' என்று (ஆழ்வானை நோக்கி) அருளிச்செய்ய, அதுகேட்ட ஆழ்வானும் “மின்னின் நிலையிலமன்னுயிராக்கைகள்' என்றபாசுரத்தைத் திருவுள்ளம்பற்றிஒரு ஸம்வத்ஸரம் இச்ஶரீரத்துக்கு நிலையுண்டோ இல்லையோ! என்று வியாகுலப்பட்டு விசாரித்தருளி, பெற்றாலல்லது தரித்திருக்கமுடியாத பேராசையாலே, ஆசார்யன் திருமாளிகை வாசலிலே மாஸோபவாஸம் பண்ணுகை ஸம்வத்ஸர ஶுஶ்ரூஷையோடு ஒக்கும் என்று சாஸ்த்ரமுண்டென்றறிந்து அங்ஙனே உபவஸித்திருந்து அவ்வர்த்தத்தைப் பெற்றார்.

இப்படி தேவுமற்றறியாதே எம்பெருமானார் திருவடிகளிலே அதிப்ரவணராயிருக்கிற விவர் தம்முடைய ஜந்மபூமியிலே தமக்கு தேஹயாத்ராஶேஷமாக முன்பு சேமித்துவைத்த சில ஸுவர்ணபாத்ராதிகளும் ஸ்வரூப விருத்தமாகையாலே அவை நிச்சேஷமாகப் பரித்யஜிக்கத் தக்கவை என்று திருவுள்ளம்பற்றி ஆசார்யன் ஸந்நிதியிலே விடைபெற்றுக் கூரத்துக்கு எழுந்தருளி அவற்றைப் பாகவதர்கட்கு ஸ்வாதீநமாக்கிவிட்டு, 'ஆண்டாள்' என்ற திருநாமத்தால் ப்ரஸித்திபெற்ற மஹாகுணசாலிநியான தமது தேவியாரையும் கூட்டிக்கொண்டு பெருமாள்கோயிலில் பேரருளாளனை மங்களாஶாஸநஞ்செய்தருளி நம்பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளா நிற்கச்செய்தே ஸ்ரீமதுராந்தக ஸமீபத்தில் காட்டிலே எழுந்தருளும்போது, ஆண்டாள், 'பயம்ஸம்பவியா நிற்கிறது'' என்ன, ஆழ்வான், “மடியில் கனமிருந்தாலன்றோ வழியில் பயமுண்டாவது; அப்படி உன்னிடத்தில் ஏதாகிலும் உண்டோ?'' என்று கேட்டருள, “ஸ்வர்ணபாத்ரத்தில் அமுது செய்துகொண்டிருந்த தேவரீருக்கு இலையில் அமுது செய்வது வருத்தமாயிருக்குமே என்றெண்ணி ஒரு ஸ்வர்ணவட்டிலை மாத்திரம் முன்பு மிகுத்தினேன், அது மடியில் இராநின்றது'' என்று திருச்செவியிலே ரஹஸ்யமாக விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும், “பொன்வட்டில் பறித்தெறிந்த புகழுடையோன் வாழியே'' என்னும்படி அப்பொன்வட்டிலை அவள்கையில் நின்றும் வாங்கிக் காட்டில் தூற்றி

லே எறிந்துவிட்டு, உடையவர்க்கு ஸஹாயவ்யாஸநம் பண்ணின ஸ்ரீ மதுராந்தகத்திலே எழுந்தருளி ஏரிகாத்த பெருமாளைத் திருவடி தொழுது அங்கே திருமகிழடியிலே எழுந்தருளி 'அயம் விளைந்த இடம்' என்று அவ்விடத்தை ஸேவித்து மனமகிழ்ந்து மற்றைநாள் தொடங்கிப் பயணகதியிலே வழியிலுள்ள திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு கோயிலேற வெழுந்தருளி முன்புபோலே உடையவர் ஸ்ரீபாதத்தில் அந்தரங்ககிங்கரராய் எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே கோயில் கொத்திலுண்டானவர்கட்குத் தலைவராய் உடையவர்பக்கலில் வைமுக்ய்முடையராயிருந்த திருவரங்கத்தமுதனார் ஒருநாள் உடையவர் ஸந்நிதியிலேவந்து ஸேவித்து, "பாவங்கள் கூடுபூரித்துக்கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு ஶேஷமாக்கும்படி ஸத்துநிஷ்டராயிருப்பாரொருவரைக் காட்டியருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஆழ்வானை அழைத்தருளி அமுதனரைக்காட்டி "இவர் நம்முடைய வாழ்முதலான பெருமாள் ஸ்ரீகார்யத்துக்குப் பரிவராயிருப்பவர்; இவர் தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும்" என்றருளிச்செய்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அவரைத் தாழவிட்டு அநுவர்த்தித்துப் பரிபக்வராக்கி உடையவர் திருவடிகளிலேகொண்டுவந்து காட்டிக்கொடுக்க, உடையவரும் அவரை ஆழ்வான் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினர். "மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம், குழியைக்கடக்கும் நங்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்" என்றாரிறே அமுதனர்தாம்.

அமுதனரும் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய் வர்த்திக்கிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, ஸம்ஸ்காராநந்தரம் "ஏகாஹத்துக்கு ஒருவரை வரவிடவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும்ஆழ்வானை "நீர்போம்" என்ன, ஆழ்வானும் அப்படியே எழுந்தருள, அமுதனரும் "ஆழ்வான் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே"! என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹத்திலே அமுது செய்தருளப்பண்ணி ஜ்ஞாதீயங்களெல்லாம் அத்தலையிலதாகவே அறுதியிட்டிருக்குமவராகையாலே அபரிமிதமான தநத்தை ஸமர்ப்பித்து, இவற்

றைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும்'' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வானும் அவருடைய ப்ரார்த்தனைக்காக அவற்றை அங்கீகரித்துக் கநகவர்ஷமாகத் தெருவிலே வர்ஷித்துக்கொண்டு எல்லாவற்றையும் இறைத்துவிட்டுத் திருக்காவேரியிலே நீராடித் திருமண்காப்பு சாத்திக்கொண்டு உடையவர் ஸ்ரீபாதத்திலே சென்று ஸேவித்து நிற்க, உடையவரும் ஆழ்வானைநோக்கி 'அங்குக்கிடைத்த த்ரவ்யமெங்கே?' என்றுகேட்க; ஆழ்வானும் 'அவை துர்த்ரவ்யமாகையாலே அப்போதே கைகழிந்துபோயின' என்று நடந்தபடியை விஜ்ஞாபிக்க, 'இதொரு விலக்ஷணவ்யக்தி இருந்தபடி என்!' என்று திருவுள்ள முகந்தருளினார்.

நம்பெருமாள் ஸந்நிதித் திறவுகோல் அமுதனாருடைய ஆதீனத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாயமாகக் கைப்பற்ற வேணுமென்று ஆழ்வானை யழைத்து 'நீர்போய் ஏகாஹத்தில் ஸம்பஜித்து, முடிவில் ஸந்நிதித் திறவுகோலைப் பெற்றாலன்றி "ஸர்வம் ஸம்பூர்ணம்" சொல்லவேண்டா' என்று நியமித்தனுப்ப, ஆழ்வானும் அப்படியே திறவுகோலைப் பெற்றுவந்தார். பின்பு "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்'' என்று உலகமெங்கும் வாழ்த்தும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸந்நிதி கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினார் என்று ப்ரஸித்தம்.

பின்பு எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ரத்துக்கு ஸ்ரீபாஷ்யம் செய்தருளி ஆளவந்தார் திருவுள்ளக்குறையை நீக்கக்கருதி, அதற்காக போதாயநவ்ருத்திக்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீகோசம் காஸ்மீரமண்டலத்தில் ஸாரதாபீடத்திலுள்ளதென்றுணர்ந்து ஆழ்வானுள்ளிட்டாரையுங் கூட்டிக்கொண்டு அங்கேற எழுந்தருளித் தம்முடைய வைபவங்களைக்காட்டி வசீகரிக்கப்பட்ட ஸரஸ்வதீபண்டாராதிபதியிடத்தில் நின்றும் அந்த வ்ருத்திக்ரந்தத்தை வாங்கிக் கடாக்ஷித்துக்கொண்டிருக்கையில் ஸுமேதாவியான ஆழ்வான் இரண்டாவது அத்யாயம் முதலாக மேலுள்ள க்ரந்தம் முழுவதையும் தாம் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கிக்கொண்டார்; உடையவர் முதல் அத்யாயம் கடாக்ஷித்து முடிந்தவுடனே அங்குள்ள ப்ரதிபக்ஷிவித்வான்களுடைய துர்ப்போதனையாலே கலக்கப்பட்ட பண்டாராதிபதி அந்த ஸ்ரீ

கோஶத்தை மீட்டு ஸத்யப்படுத்த, "குறையற் காணப் பெற்றிலோமே!" என்று உடையவர் சிந்தித்திருக்க, அதுகண்ட ஆழ்வான், "நியமித்தருளினால் அவர்களாலே ஸ்வஹஸ்தமான வ்ருத்திக்ரந்தத்தை விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்" என்ன, இராமானுசன் 'இதொரு ஸர்வஜ்ஞவிபவமிருந்தபடி என்!' என்று வியந்து உகந்து, தமக்கு அந்த வ்ருத்திக்ரந்தம் ஸித்தித்ததாகவே அத்யவஸித்துப் பயணகதியிலே கோயிலேற வெழுந்தருளி ஆளவந்தார் நியமனத்தின்படியே ஸ்ரீபாஷ்யம் செய்தருளத் திருவுள்ளமாய், அதுசெய்யுமிடத்து ஆழ்வானைநோக்கி 'நான் வ்ருத்திக்ரந்தத்தை முழுதும்வாசிக்கப் பெற்றிலேனாகையால் சிற்சில இடங்களில் என்னுடைய பாஷ்யம் அத்தோடு விரோதிக்கக்கூடும்; ஆகையால் அப்படி விரோதிக்குமிடத்து 'வ்ருத்திக்ரந்தம் இங்கு இப்படியுள்ளது' என்று நீர்கூறவேணும்" என்று நியமிக்க, 'ஸ்வாமி இப்படி ஸாதிப்பது தகாது" என்று ஆழ்வான் அதற்கு இசையாதொழிய, பிறகு ஒருஸங்கேதம் செய்துகொள்ளப்பட்டது; அதாவது- "நாம் சொல்லுகிற பாஷ்யவாக்யமானது வ்ருத்திக்ரந்தத்தையனுஸரித்துக்கொண்டிருக்கிற உம்திருவுள்ளத்திற்கு ஒத்திருந்தாலொழிய நீர் திருவெழுத்துச் சாத்தவேண்டா" என்றாய்த்து.

பிறகு எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்ய ஆழ்வான் பட்டோலை கொண்டு திருவெழுத்துச் சாத்தாநிற்க, சில சில இடங்களில் கீழ்க்கூறிய ஸங்கேதம் ஸபலமாயிற்று. இவ்வாறாக எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்து தலைக்கட்டி, "பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந ச லக்ஷ்மண। த்வயா புத்ரேண தர்மாத்மா ந ஸம்வ்ருத்த: பிதா மம॥" என்று இளையபெருமாளைப் பெருமாள்கொண்டாடினாற்போலே, "நீர் எழுந்தருளியிருக்க ஆளவந்தாரைத் திருநாட்டுக்கெழுந்தருளினாராக நான் நினைக்கவில்லை" என்று ஆழ்வானைப் போரப்பொலியக் கொண்டாடியருளினார்.

பிறகு எம்பெருமானார் கோஷ்டியிலே உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவாநிற்க, "ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களும் ஶேஷத்வமும் நிரூபகமாகச் செல்லாநின்றது; இவற்றில் அந்தரங்க நிரூபகமேது?" என்று திருவோலக்கத்திலே ப்ரஸ்துதமாக, எம்பெருமானார் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் 'இத்தை

ஆசார்ய ஹேவெந வெளியிடவேணும்' என்று ஆழ்வானை நோக்கி, 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளி நம்பியை ஸேவித்து இதனை அறிந்துவாரும்'' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பி ஸந்நிதிக்கு எழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்து ஆறுமாதம் ஸேவித்திருந்தும் அவர் இரங்கக் காணாமையாலே 'எம்பெருமானார் ஸந்நிதியிலே போய் ஸேவித்துவருகிறேன்'' என்று போகப்புக, நம்பி அவரை அழைத்து ''மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே''என்றருளிச்செய்ய, 'யதீந்த்ராஜ்ஞீ' என்றெழுந்தருளினார்.

இதன் கருத்து:— "கண்கள் சிவந்து'' என்கிற பாட்டும் ''அடியேனுள்ளான்'' என்றபாட்டும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்குமவை; இவற்றுள் 'அடியேனுள்ளான்' என்ற பாட்டில் முதல்விஶேஷணத்தாலே'எம்பெருமான் ஜீவாத்மாவை அநுப்ரவேஶித்திருக்குமவன்' என்று அருளிச்செய்யக் கருதிய ஆழ்வார் 'ஆத்மாவிலுள்ளான்' என்றாவது 'என்னுள்ளான்' என்றாவது சொல்லாமல் 'அடியேனுள்ளான்' என்று அடிமையையிட்டு ஆத்மாவை நிரூபித்தமை தோற்ற அருளிச்செய்கையாலே ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிற்காட்டிலும் ஶேஷத்வமே ஸ்வரூப நிரூபகமென்றதாய்த்து.

[இந்த ஐதிஹ்யத்தைப் பலர் மாறுபாடாக உரைப்பர்; அதாவது- "உடையவர் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்யும்போது ஜீவாத்மாவுக்கு ஶேஷத்வஶூந்யமான ஜ்ஞாத்ருத்வத்தை லக்ஷணமாகச் சொல்ல அது ஆழ்வான் திருவுள்ளத்துக்கு இசையாமையாலே திருவெழுத்துச் சாத்தாமலிருக்க, உடையவரும் மேல் அருளிச்செய்யாதிருக்க, இப்படி நெடும்போதாக, உடையவரும் அதனை [illegible]பியாமல் "எழுதும்'' என்ன; இவரும் எழுதாமலிருக்க, 'ஆகில் நீயே பாஷ்யம் செய்' என்று சீறித் திருவடிகளாலே உதைத்து உள்ளே எழுந்தருள, அருகிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் "ஆழ்வான்!, உம்மை எம்பெருமானார் சீறியருளினாரே, நீர் என்ன நினைத்திருந்தீர்?''. என வினவ, ஆழ்வானும் "இவ்வாத்மவஸ்து அவர்க்கு ஶேஷமாகில் உடைமை உடையவனிட்ட வழக்காயிருக்குமா

கையாலே அடியேனுக்கு இதில் அந்வயமில்லை" என்றருளினார்: பின்பு உடையவரும் ஆலோசித்துத் தேறுதலடைந்து ஆழ்வான் கருத்தை அறிந்து இவ்வர்த்தத்தை ஆசார்யாநுமதிபெற வெளியிடக் கருதி ஆழ்வானைத் திருக்கோட்டியூர்நம்பிஸந்நிதிக்கு அனுப்ப, அவரும் அங்கேற எழுந்தருளி ஆறுமாஸகாலம் காத்திருந்து இவ்வர்த்தத்தைப் பெற்றுப் போந்தார்; பிறகு ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டினார்" என்பர்கள். இங்ஙனமாகவே ஸப்தகாதாவ்யாக்யாநம், ராமாநுஜார்ய திவ்யசரிதை, எம்பார்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷண அரும்பதவுரை முதலிய சில க்ரந்தங்களில் அச்சிடப்பட்டுக் காண்கிறது. ஆனால் இவ்வைதிஹ்யம் ஸர்வாத்மநா அஸம்பவமென்பது ஸத்யம். உடையவர் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்யத் தொடங்கும்போது "நான் சொல்லுகிற வாக்யம் உம்திருவுள்ளத்துக்கு இசைந்தாலொழிய நீர் எழுதவேண்டா" என்று ஆழ்வானுக்கு நியமித்தருளினார் என்பதாகச் சொல்லிவைத்து, இங்ஙனே ஆழ்வான்மேல் சீறி அவரைக் காலாலும் கையாலும் உதைத் தருளினார் என்றால், இதனால் 'உடையவர் தாமஸப்ரக்ருதி' என்று அவர்க்கு தூஷணஞ் சொன்னபடியாமத்தனையொழிய வேறில்லை. மேலும் ஸ்ரீபாஷ்யத்துள் ஆத்மாவுக்கு சேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வமோ ஜ்ஞாத்ருத்வே ஸதி சேஷத்வமோ, கேவலம் ஜ்ஞாத்ருத்வமாத்ரமேயோ லக்ஷணமாகச் சொன்ன இடமும் கிடையாது. ஸ்ரீ பாஷ்யம் அருளிச்செய்யும்போது இவ்வளவு வ்ருத்தம் நடந்திருந்தால் ஸ்ரீ பாஷ்யவ்யாக்யாநங்களில் இவ்வைதிஹ்யம் எழுதாமல் விடுபட்டிராது. ஸ்ருதப்ரகாசிகை முதலியவற்றில் இதன் ப்ரஸ்தாவமும் காணப்பெற்றிலோம். "ஸம்ப்ரதாயார்த்துக்கு ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் த்ருஷ்டமென்னும்படி சாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்" என்ற ஸ்ரீவசநபூஷண ஸூக்தி வ்யாக்யாநத்திலும் "திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்து நின்று ஸஹாநியாகப் பெற்ற அர்த்தமிறே இது" என்றிவ்வளவே ஜீயர் அருளிச்செய்தது. "அடியேனுள்ளான்" என்ற பாட்டின் வியாக்யாநங்களிலும் இவ்வளவேயுள்ளது. இனி "ஸநாதநத்வேதாமராஹஸ்யம்" என்பர் சிலர்; அந்த நியாயம் இவ்விடத்துக்குச்சேராது; "அடியேனுள்ளான்" என்றபாசுரத்தின் ஈட்டின்

அரும்பதவுரையில் "ஆத்மாவுக்கு அந்தரங்க நிரூபகமேது? என்று எம்பெருமானார் திருவோலக்கத்திலே ப்ரஸ்துதமாக" என்று ஸ்பஷ்டமாயிருப்பதால். ஆக இப்படி ஸ்ரீபாஷ்யத்தில் ஸுவிதிதமானதொரு விஷயத்தில் வைமத்யம் உண்டானதாகச் சொல்லிக் கல்பிக்கும் ஐதிஹ்யம் ஸ்ரீபாஷ்யம் நடையாடாத தேசத்திலே விலைச் செல்லுமத்தனை. குருபரம்பராப்ரபாவாதிகளில் இங்ஙனே மாறுபாடாகக் காண்பது அச்சிடுவிக்குமவர்கள் சேர்த்த திருமணமென்றே கொள்ளத்தக்கதென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன். நிற்க. இப்படி எம்பெருமானார்க்கு ஆழ்வான் உசாத்துணையாயிருந்து ஸர்வநிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே ராஜேந்த்ரசோழபுரத்தில் அரசாள்கின்ற குலோத்துங்க சோழராஜா துஷ்ட ஶைவனாகையாலே கள்ளப்பொய்ந்நூல்களை மெய்ந்நூலாகக்கொண்டு தானும் தன்புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களையெல்லாந்திரட்டி "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்று எழுத்திடச்சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவனுடைய செங்கோன்மைக்கு அஞ்சியும், சிலர் ஸ்வர்ணக்ஷேத்ராதிகளுக்கு ஆசைப்பட்டும் அங்ஙனே எழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச்சிறிது வாத்ஸல்யம் பெற்றிருந்த "நாலூரான்" என்கிற வைஷ்ணவன் ராஜாவைநோக்கி, எங்களிராமாநுசன் எழுத்திட்டாலன்றோ எழுத்திட்டதாவது; மற்ற நீசர் இட்டாலென்ன? இடாவிடிலென்ன? என்று கலஹம்பண்ண, அது கேட்ட அரசனும் அப்போதே இராமாநுசனை அழைத்துவரும்படி ஆள்களை அனுப்ப, அவர்களும் உடையவர் மடத்தேறச் சென்றவளவிலே இந்தவ்ருத்தாந்தத்தைஉணர்ந்த ஆழ்வான்உடனேஎம்பெருமானாருடைய காஷாய த்ரிதண்டாதிகளைத் தாம் தரித்து அவரிடத்தும் விண்ணப்பஞ்செய்யாமல் அந்தராஜமநுஷ்யருடனே போகப்புறப்படும்போது பெரியநம்பியும் சிலமுதலிகளும் தாமுங்கூடவருவதாகப்புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜஸபைக்குஎழுந்தருளினர். †

---

† த்ரிதண்டகாஷாயாதிகளை ஆழ்வான் உடையவர்தாமே கொடுக்கப்பெற்றார் என்றுஞ் சொல்லுவர்கள்.

அநந்தரம் உடையவர் நீராட்டஞ்செய்து எழுந்தருளி, த்ரிதண்டகாஷாயாதிகளைத் தேடினவளவிலே, கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜமநுஷ்யருடனே எழுந்தருளினார்'' என்று முதலியாண்டான் விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில் அவருடைய வெள்ளையைத் தாருங்கோள்' என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தைவாங்கித் தாம் சாத்திக்கொண்டு 'ஆழ்வானுக்கும், பெரியநம்பிக்கும் என்ன தீங்குநேருமோ!' என்று சிந்தித்துத் துவண்டிருக்க, இனி ஸ்வாமி இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கை உசிதமன்றென்று முதலியாண்டானுள்ளிட்ட முதலிகள் விஜ்ஞாபிக்க, உடையவரும் யாத்திரையாகப் புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார். இதுநிற்க. ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலே எழுந்தருளினவளவிலே, அவன் இவர்களைப்பார்த்து "ஶிவாத்பரதரம் நாஸ்தி'' என்று எழுத்திடச்சொல்ல, ஆழ்வானும் ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிகளாலே 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன்'' என்று பலமுகமாக உபந்யஸிக்க, சோழனும் அதுகேட்டு மிகவும் ரோஷமுடையனாய் "நீர் பெரியவித்வானாகையாலே தோற்றினபடியெல்லாம் சொல்லவல்லீர்; அங்ஙனன்று; நான்சொன்னபடியே 'ஶிவாத்பரதரம்நாஸ்தி' என்றுஓலையில் எழுத்திடும்'' என்றுஓலையைக்கையிலே கொடுத்துக் கனக்க நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் தம்முடைய அத்யவஸாயம்குறைவுபடாமே "த்ரோணமஸ்தி ததஃபரம்'' என்று எழுத்திட்டார்.

[சோழன்சொன்ன 'ஶிவாத்பரதரம் நாஸ்தி'' என்றவாக்யத்துக்கு 'ருத்ரனைக்காட்டிலும் மேலானவஸ்து இல்லை' என்பதாகப் பொருள் கொள்ளாமல் 'ஶிவம்' என்று குறுணிக்குப் பெயராகையாலே குறுணிக்கு மேற்பட்ட வஸ்து இல்லை என்று சோழன் எழுத்திடச் சொல்வதாகக்கொண்டு "த்ரோணமஸ்தி ததஃபரம்'' என்றெழுதினார். அதாவது - பரிமாணத்தில் குறுணிக்கு மேற்பட்ட வஸ்துஇல்லைஎன்பது தப்பு; அதற்குமேற்பட்ட பரிமாணம் பதக்கு இருக்கிறது என்றபடி. த்ரோணமென்று பதக்குக்குப் பெயர்:]

சோழனும் இவர் இப்படி பரிஹஸித்து எழுத்திட்டபடிகண்டு மிக்க கோபமடைந்தவனாய், பெரியநம்பியை அழைத்து நீர் எழு

022:119
178574.
149

த்திடும்' என்ன, அவரும் 'ஸ்ரீமந்நாராயணனே பரன்' என்று பஹுமுகமாக அருளிச்செய்ய பிறகு சோழன்கோபம் பொறுக்கமாட்டாதவனாய் 'இவ்விருவர்களுடைய கண்ணையும் தோண்டிவிடுங்கள்' என்று தன் மநுஷ்யர்கட்குக்கூற, அவ்வளவிலே ஆழ்வான் சோழனைக்குறித்து 'நீ மஹாபாதகியாகையால் உன்னைப்பார்த்த கண்கள் எனக்கு ஆகாது' என்று தாமே தம்முடைய ஸ்ரீஹஸ்தங்களாலே திருக்கண்களை வாங்கி எறிய, பின்புராஜமநுஷ்யர்கள் பெரியநம்பியைப்பிடித்துக் கொண்டுபோய் சோழன்சொற்படிசெய்து படைவீட்டில் நின்றும் புறப்படவிட ஆழ்வான் 'தர்சநத்துக்கு தர்சநம்கொடுக்கப்பெற்றோமே! [ஸித்தாந்தத்துக்காகக் கண்ணை இழக்கப்பெற்றோம்! என்றபடி] என்று மகிழ்ந்திருக்க, பெரியநம்பி வ்ருத்தராகையாலே அவ்வேதனை பொறுக்கமாட்டாமல் அங்கேஒரு கொல்லைத்தலைமாட்டிலே ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண்வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு அங்கே திருநாட்டுக்கெழுந்தருளினார். பின்பு, ஸ்ரீபராந்தக புரத்தின்றும்வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் 'திருப்பள்ளிபடுத்து, ஆழ்வானை ஒருகட்டணத்திலே எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் தங்களுடைய ஸ்ரீபராந்தகபுரத்திலே நிறுத்தித் திருக்கண்வேதனை தீருமாறு ஒருஸம்வத்ஸரம் உபசரித்து, பிறகு கோயிலிலேகொண்டுவிட, ஆழ்வான் பெரிய ஸ்ரீபலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்துத் தம்முடைய அளவற்ற ஆர்த்தியைஆவிஷ்கரித்து "பெரியநம்பியை அங்கீகரித்தாப்போலே அடியேனையும் அங்கீகரித்தருளலாகாதா?" என்றுதிருவுள்ளம்நொந்து விண்ணப்பம்செய்து, பின்பு உள்ளே புகுந்து ஸேவிப்பதாக எழுந்தருள 'ராமாநுஜ ஸம்பந்தமுடையாரொருவரும் உள்ளேபுகுந்து ஸேவிக்கவொண்ணாது,என்று, சோழன் கட்டளையிட்டுவைத்தபடி அவனுடைய ஆட்கள் ஸந்நிதிவாசலிலே நின்று ஆழ்வானை உள்ளே புகவொட்டாமல் தகைய, அங்குள்ளாரில் சிலர் "அவர்களெல்லாரும்போல் அல்ல இவர்; ஆத்மகுணமுடைய இவரைப்புகுரவிடுங்கோள்" என்ன; இவற்றைக்கேட்ட ஆழ்வான் திடுக்கிட்டு நடுங்கி நாலடிபின்வாங்கி, "ஐயோ! எல்லார்க்குமுண்டான ஆத்மகுணம்

ஆசார்யஸம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது; அடியேனுக்குண்டான ஆத்மகுணம் ஆசார்யஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ளுகைக்கு ஹேதுவாய்விட்டதோ!" * என வெறுத்துக்கொண்டு புறப்பட்டு, "என்பேற்றுக்குஎம்பெருமானார் திருவடிஸம்பந்தமே அமையும்; தத்ஸம்பந்தத்தையொழியப் பெருமாளை ஸேவிக்க வேண்டுவதில்லை" என்று கோயில் வாஸத்தை விட்டுவிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட்டு எழுந்தருளினார்.

வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய து:க²ங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை நினைந்து நெஞ்சுகனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம், அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை அருளிச்செய்து, அநந்தரம் திருமாலிருஞ்சோலைமலையை அடைந்தருளி அவ்விடத்திலே சுந்தரத்தோளுடையானை மங்களாஶாஸநம் செய்தருளி அவ்வெம்பெருமான் விஷயமாக "ஸுந்த³ரபா³ஹுஸ்தவம்" அருளிச்செய்து அதன்முடிவிலே,

"விஜ்ஞாபநம் வநகி³ரீஶ்வர! ஸத்யரூபாம்
குர்வீதா²: கருணார்ணவ! மாமகீநாம்।
ஸ்ரீரங்க³தா⁴மநி யதா² புநரேவ ஸோஹம்
ராமாநுஜார்யவஶக³: பரிவர்த்திஷீய॥" என்றும்;

"ஸ்ரீரங்க³ஶ்ரிய யதூ³த்³வஹம் வ்ருஷகி³ரணயந் ஸுஹ்ருத்³கே³ஹாஶ்யாங்க³கா³"
"காருண்யாத்³பு⁴தவாரிதே⁴ வ்ருஷபதே ஸேஸத்யஸம்ஶந!
ஸ்ரீஶேஷாத்³ரிந! யோஷ்யதாவிரஹிதாநஸ்தாய, ஸர்வஸ்வத³!
க்ஷாம்யந் ஸாயுஜ்யதே³ந: க்ருதாஸ்வஸ்தே நிவிஶநேவாவதாரா
ந் க்ஷணாஶ்
தி³வ்யாம்யாதி³நிஶம் க்ஷேமேஷு ஹரவந்! ஸ்ரீரங்க³யாதி³ஶ்ரியம்॥"

---

* ராமாநுஜ ஸம்பந்திகளை உள்ளே விடக்கூடாதென்கிற கட்டளையின்படி ஆழ்வானையும் விலக்கவேண்டியிருக்க, ராமாநுஜ ஸம்பந்தத்தை அஸத்கல்பமாக்கி இவருடைய ஆத்மகுண ஸம்ருத்தியையே அவர்கள் மதித்தபடியால் அது இவர்க்கு அஸஹ்யமாயிற்று.

என்றும் திருவரங்கமாநகர் நிஷ்கண்டகமாக வேணுமென்றும் எம்பெருமானார் திருவடிகளின் நிழலிலே தாம் வாழப்பெறவேணுமென்றும் ஸக்தராய் ப்ரார்த்தித்தருளினார்.

அவ்வளவிலே 'அந்தமஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணாகிப் புழுத்துமாண்டான்' என்ற கர்ணாம்ருதமான வ்ருத்தாந்தத்தைக் கேள்விப்பட்டு அழகர் ஸந்நிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேற எழுந்தருளினார்.

திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த எம்பெருமானார் கோயில்நின்றும் வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே சோழராஜஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும்நேர்ந்த ஆபத்தைக் கேள்விப்பட்டுப் வாத்ஸல்யபரவசராய் 'ஆழ்வானாகிலும் உயிர் வாழ்ந்திருக்கப் பெற்றோமே!' என்று திருவுள்ளம்தேறி, அப்போது தம்மிடத்தில் கிங்கரராயிருந்த மாறொன்றில்லாமாருதிச் சிறியாண்டானை 'நீர் மிகவும் விரைவாகக் கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ளவிசேஷங்களையும் அறிந்துவாரும்' என்று நியமித்தருள, அவரும் அதிசீக்ரமாகக் கோயிலெழுந்தருளிச் சோழன்புழுத்துமாண்ட வ்ருத்தாந்தமுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸந்நிதியிலே அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம்போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சியுடன் உடனே அங்குநின்றும் புறப்பட்டு மிகவிரைந்துகோயிலுக்கெழுந்தருளி முதலிகளும்தாமுமாக ஆழ்வான்திருமாளிகையேற எழுந்தருள, ஆழ்வானும் எதிரேயெழுந்தருளி உடையவர்திருவடிகளிலே விழுந்துஸேவித்துத் திருவடிகளைச் சிக்கனப்பிடித்துக்கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானைவாரியெடுத்து அணைத்துக்கொண்டு துக்காதிசயத்தாலே ஒருவார்த்தையும் அருளிச்செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல்தழுத்து விம்மல் பொருமலாய், "ஆழ்வான்! இத்தர்சனத்துக்கு ப்ரவர்த்தகரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய துஷ்க்ருதபலமன்றோ?" என்றிப்படி பலவாறாக அருளிச்செய்துஆழ்வானைத் தேற்றியருளி, அவரையும்கூட அழைத்துக்கொண்டு மடமேயெழுந்தருளினார்.

அதின் மற்றைநாள் உடையவர் ஆழ்வான்திருமாலிருஞ்சோ

லையாத்ரையிலே அருளிச்செய்த மூன்றுஸ்தவங்களையுங் கேட்டருளி மிகவும் திருவுள்ளமுகந்து ஆழ்வானைநோக்கி "உம்முடைய இவ்வருளிச்செயல்களாலேயன்றோ நம்முடைய திருவரங்கச்செல்வம் நிஷ்கண்டகமாகப் பெற்று நாமும் இங்கு வாழ்ந்திருக்கப்பெற்றோம்; இனி, பேரருளாளர் ஸர்வாபீஷ்டவரப்ரதாநதீக்ஷிதராக ப்ரஸந்நராயிராநின்றார்; நீர் அவர்விஷயமாக "அடியேனுக்குக் கண் தந்தருளவேணும்" என்று ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பஞ் செய்யும்" என்றருளிச்செய்ய, ஆழ்வானும் "அடியேனுக்குஇக்கண் வேண்டா" என்ன; எம்பெருமானாரும் 'அப்படியன்று; ஒருஸ்தோத்ரம் சொல்லவேணும்' என்று பலகாலும் நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் வரதராஜஸ்தவமருளிச்செய்யத்தொடங்கி "நீலமேகநிபமஞ்ஜநபுஞ்ஜஶ்யாமகுந்தலமநந்தஶயம் த்வாம்। அப்ஜபாணிபதமம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குரு கரீஶ! ஸதா மே॥" என்றஸ்லோகத்தளவுமருளிச்செய்து 'தர்ஶநம் பண்ணுகைக்கு யோக்யமான ஸவ்யாக்ஷதிவ்யநேத்ரம் அடியேனுக்குத் தந்தருளவேணும்' என்று விஜ்ஞாபிக்க, அன்றிரவே ஆழ்வானுக்குப் பேரருளாளர் ஸ்வப்நத்திலே தோன்றி 'நீர்வேண்டினபடியே தந்தோம்' என்றருளிச்செய்ய, ஆழ்வானும் உடனேமகிழ்ந்து எழுந்து நித்யாநுஷ்டாநத்தைத்தலைக்கட்டி வரதராஜஸ்தவத்தை நிறைவேற அருளிச்செய்து உடையவர் ஸந்நிதியிலே முழுதும் விண்ணப்பஞ்செய்துகாட்ட, அவரும் கேட்டு உகந்தருளினவளவிலே ஆழ்வான் ஸ்வப்நவ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் "அப்படியன்று; பெருமாள்கோயிலுக்குப் போவோம்வாரும்" என்று ஆழ்வானைக்கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு பயணகதியிலே பெருமாள்கோயிலேற எழுந்தருளி, ஆழ்வான் வரதராஜஸ்தவத்தைப் பேரருளாளர் திருமுன்பே விண்ணப்பஞ்செய்து தலைக்கட்டுகிற போது உடையவர் காயக்லேஶவராயிருக்க, பேரருளாளர் ஸ்தவம் திருச்செவிசாத்தி ப்ரஸந்நராய் "உம்முடையஅபேக்ஷிதத்தை வேண்டிக்கொள்ளும்" என்ன; ஆழ்வான் உடையவர் திருவுள்ளப்படியே கண்வேண்டிக்கொள்ளாமல் "நான்பெற்றபேறு நாலூரானும் பெறவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, "அப்படியே பெறக்கடவன்" என்று பேரருளாளர் திருவாய் மலர்ந்தருளின

வளவிலே, இதை உடையவர்கேட்டுப்பதறி ஓடிவந்து திருவுள்ளம் உளைந்து பெருமாளைநோக்கி "ஸர்வஜ்ஞரான தேவரீர் இப்போது என்நினைவைத்தலைக்கட்டவில்லையே" என்றும், ஆழ்வானைநோக்கி, "நீர்ஸ்வதந்த்ரராய் என்நினைவைத் தலைக்கட்டாதே அதிலங்கித்து நான்வருவதற்குமுன்னே இப்படிசெய்தீரே" என்றும் இருவரையும் வெறுத்துரைத்து 'இனி என்!' என்று திகைத்துநிற்க, பேருளாளர் "நம்மையும் உம்மையும் காணுமிடத்துக் கட்கண்ணாலே காணக்கடவர்" என்று வரப்ரதானம் பண்ணியருள, ஆழ்வானும் பெருமாளைத் தமதுகட்கண்ணாலே கண்டு ஸேவித்து, சாத்தின திருவாபரணங்களையும் திவ்யவிக்ரஹாவயவாதிகளையும்இவையிவை என்றுகுறித்துக்காட்டியருளி உடையவர்திருமேனியையும் ஸேவித்துக்காட்டியருள எம்பெருமானார் க்ருதார்த்தராய் ஆழ்வானுடன் மீண்டு கோயிலேற எழுந்தருளினார்.

ஒருநாள் எம்பெருமானார் ஏகாந்தத்தில் உச்சிவெய்யிலிலே தாமொருவராகத்திருவரங்கத்தமுதனார் க்ருஹத்துக்கெழுந்தருள, அமுதனாரும் 'இதுவென் இப்போது!' என்று விஸ்மயத்துடனே ஸேவித்துக்கேட்க; உடையவரும் "உம்முடைய பௌரோஹித்யக் காணியை நமக்குத்தரவேணும்" என்ன; மஹாப்ரஸாதமென்று ஸ்வீகரித்து ஹிரண்யோதகதாராபூர்வகமாக ஆழ்வானை உத்தேசித்து ஸமர்ப்பித்தார். அன்றுதொடங்கி ஆழ்வானைப் பௌரோஹித்யத்துக்குக் கட்டளையிட்டு நித்யம் பெருமாள்ஸந்நிதியிலே புராணம் விண்ணப்பஞ் செய்யும்படியாக நியமித்தருளினார்.

உடையவர் ஒருநாள் ஓர் ஊமையை அழைத்து மடத்துக்குள்ளே நிறுத்தி வாசற்கதவுகளை அடைத்து ஸம்ஜ்ஞையாலே தம்திருவடிகளைக்காட்டிக்கொடுக்க, அந்த ஊமையும் இத்திருவடிகளே நமக்குத் தஞ்சமென்று அறிந்து அத்திருவடிகளைத் தன்தலைமேல் அணிந்துகிடக்க, ஆழ்வான் இதைக்கதவின்புரையாலே கண்டு "ஐயோ! ஆழ்வானாகப்பிறந்து ஶாஸ்த்ரங்களைக்கற்றுக் கெட்டேனே! ஊமையாக ஜநிக்கப்பெற்றிலேனே!" என்று முட்டிக்கொண்டு அழுதார்.

ஒருநாள் சிலஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வானருகேவந்து, நாலூரான் தேவரீரளவன்றிக்கே நம்ஸம்பந்தத்துக்கே [illegible]

ருக்க அவனே "க்ஷிவாதி - நக்ஷத்ராதி" என்னும்படியான உண்டனே கட்கு ஆளாக்கவேண்டுவது ப்ராப்தமாயிருக்க, அப்பாவிக்குமுட்பட மோக்ஷமளிக்கவேணுமென்று பேரருளாளர் ஸந்நிதியில் வேண்டிக்கொண்டதாமே, இது என்ன அநியாயம்!" என்று முறைப்பட, "அப்படிப்பட்ட பாவிகளுக்கன்றோ இரங்கவேண்டுவது, மீனுக்குத்தண்ணீர்வார்த்துப் பயனென்?" என்று ஆழ்வான் பணிக்க அதுகேட்டவர்கள் இவருடைய ஹ்ருதயௌதார்யகுணத்துக்கு மிகவும் வியந்தார்கள்.

அநந்தரம், எம்பெருமானார் ஸந்நிதியிலே திருவாய்மொழி காலக்ஷேபம் தொடங்கி, சூழ்விசும்பணிமுகில் திருவாய்மொழியளவிலே வந்தவாறே "முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள" என்றபாசுரத்தில் "பரமபதத்திலே முற்பட்டிருக்குமவர்கள் பிற்பட்டு எழுந்தருளுமவர்களை எதிர்கொண்டு உபசரிப்பர்கள்" என்றிப்படி பரக்க அருளிச்செய்யக்கேட்டஆழ்வான் "நாம் பரமபதம்போக உடையவர்க்குப் பிற்பட்டோமாகில் அவ்விடத்திலே உடையவர் நம்மை எதிர்கொண்டு உபசரிக்கவேண்டும்படி நமக்கு மஹாபசாரம் விளையுமாதலால் பரமபதத்துக்கு நாம் முற்படவேணும்" என்று அறுதியிட்டு எம்பெருமானார் பக்கலிலே விண்ணப்பஞ்செய்யாமல் நம்பெருமாள்முன்பே போய்நிற்க; பெருமாளும் ஆழ்வானைக்கண்டு, "என்காணும் ஆழ்வான்! ஒன்றுசொல்லிக்கொள்ளவந்தாற்போலிராநின்றீர்" என்ன; ஆழ்வானும் ஒரு ஶ்லோகத்தை விண்ணப்பஞ்செய்து பரக்கஉபந்யஸிக்க, பெருமாள்திருவுள்ளமுகந்து "உமக்கு வேண்டிற்றெல்லாம்தருகிறோம்; வேண்டிக்கொள்ளும்" என்ன; ஆழ்வானும் "நாயந்தே! அடியேனுக்குப்பண்டே எல்லாம் தந்தருளிற்றே" என்ன; பெருமாளும் "அப்படியன்று; இப்போதும் வேண்டிக்கொள்ளும்; நம்பெண்டுகளாணை! நம்இராமாநுசனாணையே! தருகிறோம்" என்று நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் "பகவதநுபவவிரோதியான இந்த ஶரீரத்தை விடுவித்து நித்யவிபூதியில் தேவரீருடைய நித்யாநுபவத்தைத் தந்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க; அதுகேட்டபெருமாளும் ஆழ்வானைப் பிரியவேண்டிற்றே! என்று மிகவும்வருந்தி "இந்தவரமொழிய வேறுவரம் வேண்டிக்கொள்ளும்" என்ன; 'ஒன்றேயுரை

ப்பான் ஒருசொல்லே சொல்லுவான்’ என்றதைப் பொய்யாக்க லாமோ? வேண்டினதைத்தருகிறேனென்று அருளிச்செய்து மீண் டும் இங்ஙனே மறுக்கலாமோ? அடியேன் வேண்டினதைப் தந் தருளவேணும்” என்ன; பெருமாள் ‘இனிச்செய்யலாவதில்லை’ என்று துணிந்து “உமக்கும்உம்முடைய திருநாமத்தைச் சொல்லு மவர்கட்கும் உம்முடைய ஸம்பந்தம் பெற்றவர்கட்கும் மேல்வீடு தந்தோம்” என்று திருவாய்மலர்ந்தருளி, திருப்பரியட்டமும் தளிகைப்ரஸாதமும் பூந்தண்மாலைத்தண்டுழாயும் திருக்கைச் சிறப்பும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்.

உடையவரும் ஆழ்வான் இங்ஙனே வரம்பெற்றபடியைக்கே ட்டு, ‘முன்பு நாம் திருக்கோட்டியூர் நம்பிஸந்நிதியிலே பெரிய திருமந்த்ரார்த்தத்தைப் பெற்றபோது ‘இவ்வர்த்தத்தைப் பரமரஹ ஸ்யமாகப் பேணிக்கொண்டிரும்’ என்று நம்பிநியமித்தருளினபடி யை அதிலங்கித்து அத்திருக்கோட்டியூரிலேயே தெற்காழ்வார் திருவோலக்கத்திலே அப்பரமரஹஸ்யார்த்தத்தைப் பலருமறிய வெளியிட்டோமாகையால் ஆசார்யநியமநத்தை அதிக்ரமித்ததற்கு ஃபலமான நரகமே நமக்கு ஸித்திக்கும்; மோக்ஷம் பெற நமக்கு வழியில் லை’ என்றிருந்தேன்; இப்போது ஆழ்வான் ஸம்பந்தமுடையார்க் கும் மேல்வீடுதந்தோமென்று நம்பெருமாள் நியமித்தருளினபடி யால் இனி நமக்கு ஒருகுறையுமில்லை; நமக்கு ஆழ்வான் ஸம்பந்த முண்டே!” என்று களித்து உடுத்தகாஷாயத்தைக்களைந்து ஆகாச த்திலே எறிந்து ஆநந்தத்துக்குப் போக்குவிட்டார். இத்தை அநு ஸரித்தாய்த்து-

“ஸ்வர்த்தோ யத்வஸாமிஜ்வம் ஸௌரோமிரத்ய, பதேர்த்
ஶிஷ்யைர் யஸ்யாப்யநயமபமதா தேஶிகா முக்திமாபு:।
ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம்
யத்ஸம்பந்தாதமநுத கதம் வர்ண்யதே கூரநாத:”

என்றஶ்லோகம் திருவவதரித்தது.

“யத்ராசார்யாநபந்த்ஸுகஹவர்த்தாம் ஸத்வதே முக்திமேத்ய
யத்ஸம்பந்தாச் சாஸ்த்ராநந்த ஸயதிக்ஷாவதிஸ்வஸ்வமுக்திம்।
தஸ்மை கூராதிநாயெ” என்று ஸ்ரீவரவரமுநிஶதகத்திலே ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவும் அருளிச்செய்தார்.

[இத்தால், ஸுக்ருதிஶ்ராவிக்கு ஸதாசார்யஸம்பந்தம்போலே ஸச்சிஷ்யஸம்பந்தமும் ஒக்கும் என்றதாயிற்று.†]

பிறகு, இப்படி தம்பேற்றை நினைத்துக்களித்த எம்பெருமானார், 'உலகுக்கு உயிரான ஆழ்வானை இழந்து நாம்எங்ஙனே உயிர் வாழ்ந்திருப்பது?' என்று கனக்க க்லேஶித்து ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையுங் கூட்டிக்கொண்டு ஆழ்வானிருந்தவிடத்தேறச் சென்று "ஆழ்வான்! என் செய்தீர்! என் செய்தீர்!! இப்படியும் எம்மைப்படுகொலையடிக்கலாமோ?" என்றுகேட்க; ஆழ்வானும் பரமபதத்துக்குத் தாம்முற்படவேண்டிய காரணத்தை அருளிச் செய்ய, உடையவர் அதுகேட்டு "நஶாஸ்த்ரம் நைவச க்ரம:" என்று அடைவு கெட்டிருக்கும் ஶரமவிஷயத்திலே நீர் அடைவு தேடுவதே! இதொரு ஶேஷஜ்ஞதை இருந்தபடி என்!" என்று போர விஷண்ணராய்க் கண்ணநீர் கைகளாலிறைத்து ஆழ்வானை அணைத்துக்கொண்டு விம்மல் பொருமலாய்த் திருவுள்ளமுடைகுலைப் பட்டு, 'ஐயோ! ஆழ்வான்! உயிர்நிலையானஉம்மை இழந்து எங்ஙனே யஸிப்பேன்? என்னையும் உடன்கொண்டுபோகத் திருவுள்ளம் பற்றினீரில்லையே! நம்மை விட்டுப்போக உமக்கு ருசிப்பதே! பரமபதநாதனும் அங்குள்ளாரும் என்னநோன்பு நோற்றார்கொ

---

† "தவைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே" என்ற ஶரணாகதிகத்யஸூக்தியின் ஶ்ருதப்ரகாஶிகையாலும், "உக்த்யா தநஞ்ஜயவிபீஷணலக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம். ஶ்ராவ்யம் வரம் ததநுபந்தஜுஷாவஶிஷ்டே: நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத!" என்றதேஶிகனருளிச்செய்த ந்யாஸதிலகஶ்லோகத்தாலும் எம்பெருமானாரும் தம்முடைய ஸம்பந்திஸம்பந்திகட்கும் மோக்ஷமுண்டாம்படி வரம் பெற்றருளினதாக விளங்குகிறதேயென்னில்; ஆம்; கூரத்தாழ்வான் இங்ஙனே வரம்பெற்றபிறகு மற்றொரு ஸமயவிஶேஷத்திலே எம்பெருமானாரும் இங்ஙனேவரம் பெற்றது உண்மையே; ஆயினும் எம்பெருமானார் தமக்கு மோக்ஷ ஸித்தியுண்டென்று களித்தது ஆழ்வான் ஸம்பந்தத்தைக் கணிசித்தேயாம்.

லோ! இங்குஉறங்குகிற பெருமாளும் இங்குள்ளநாங்களும் என்ன பாபம்பண்ணினோமோ! 'இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே'' என்றபாசுரத்தையும் மறந்திட்டீரே! ஐயோ! என்செய்தீர்!! இனி உம்திருவுள்ளம் கலங்கும்படி பலசொல்லிப் பயனென்? உம்முடைய பேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ? ஸுகமாக நித்யவிபூதியேற எழுந்தருளீர்' என்று ஆழ்வான்திருமுதுகைத் தடவி அஞ்ஜலித்து விடைகொடுத்தருளினார்.

இனி ஆழ்வான்திருநாட்டுக்கெழுந்தருளினபடியை நெஞ்சால் நினைக்கப்புக்காலும் ஸஹிக்கப்பெறாத அடியேன் அதை எழுதவல்லனும்படி மநஃகாடிந்யமுடையேனல்லேனாதலால் "இப்படியும் ஒருமஹாநுபாவர் இவ்விருள்தருமாஞாலத்திலே திருவவதரிக்கும்படி இவ்வுலகம் பாக்கியம்பெற்றதே!" என்றும், "அவருடைய திவ்யசரிதாம்ருதஸாகரத்திலே சிலதிவலைகளை அடியேன் அநுபவிக்கப்பெறுவதே" என்றும் நினைந்து நைந்துள்கரைந்துருகுகின்றேனத்தனை.

இவ்வாழ்வானுடைய திவ்யகல்யாணகுணகணங்களையும் திவ்ய ஸ்ரீஸூக்திஸமுதாயவ்யாஹாரத்தையும் நினைக்கநினைக்க, கல்நெஞ்சும் கனியும்.

### ஆழ்வான்வைபவத்தின் ஸாராம்சம்.

க. ஆழ்வான் எல்லையில்லாத தம்முடைய ஸகலைஶ்வர்யங்களையும் த்ருணமாகநினைத்து உதறினபடியால் விரக்தர்களில் தலைவர்.

உ. எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்கைக்கும் இவர் உசாத்துணை நின்றமையால் ஜ்ஞாநிநாமக்ரகண்யர்.

ங. ஒருநாள்இவர் ஓரிடத்தே வழிபோகாநிற்க ஒருஸர்ப்பத்தால் பிடிக்கப்பட்டதவளை கூக்குரலிடக்கேட்டு 'இது ஆரறியக் கூப்பிடுகிறதோதான்!' என்று மோஹித்துவிழுந்தருளினபடியாலும், மற்றொருநாள் ஸாயம்ஸமயமாக ஒருதோட்டத்துக்கு எழுந்தருள, அங்கே அப்போதுதான் ஒருவன் ஒருவாழைக்குருத்தை அறுத்துக்கொண்டுபோக அதில் நின்றும் பால் பெருகாநிற்கக்

கண்டு ஸந்தோஷித்தபடியாலும், மற்றொருநாள் திருக்காவேரியிலே தண்ணீர்க்குடத்தை இடுப்பிலே எடுத்துவைப்பாரில்லாமல் வருந்திநின்ற ஒருபெண்ணுக்குத் தண்ணீர்க்குடமெடுத்துவைத்து வழிநடத்தியருளினபடியாலும் ஸௌசீல்யாதிகுணங்களில் நிகரற்றவர்.

௭. செல்வத்தைமுற்றும்துறந்து எம்பெருமானார்திருவடிகளிலாஸ்ரயித்ததுமுதல் நாள்தோறும் உபாதானகாலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்திசெய்து அதுகொண்டு குடும்பகாரியத்தை நிர்வஹித்துக்கொண்டு ஒவ்வொருநாளும் கிடைக்கிற போஜநோபகரணவஸ்துஸமுதாயத்தில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப்படுத்திவைத்துக்கொள்ளாமல் அன்றன்றைக்கு தேஹயாத்ரை நடத்தியருளுகையில் ஒருநாள்விடாப்பெருமழை பொழிந்ததனால் வெளியேபோய் உபாதானம் செய்துவரக்கூடாமல்போக அதனால் அன்றைக்கு வெறுந்தீர்த்த மாத்திரத்தை உட்கொண்டு, "கண்ணாநான்முகனைப்படைத்தானே காரணாகரியாய் அடியேன்நான், உண்ணாநாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோநாரணாவென்று, எண்ணாநாளு மிருக்கெசுச் சாமவேத நாண்மலர்கொண்டு உனபாதம், நண்ணாநாளவை தத்துறுமாகில் அன்றெனக்கவை பட்டினிநாளே" என்றபடி பட்டினிபாராட்டாமல் "உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமான்" என்றபடி அருளிச்செயல்அநுஸந்தாநமே யாபநமாகக்கொண்டு வேறுஉணவின்றியே இருந்திட, அன்றிரவு பெரியபெருமாள் அமுதுசெய்கிறபோதுஉண்டான திருச்சின்னவொலி கேட்டவளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக்குறித்து "உம்முடைய அடியவர் பட்டினியிருக்க, நீர் குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுகிறீரோ?" என்று நினைத்தவளவிலே ஸர்வஜ்ஞனான ரங்கநாதன் அந்த ஆண்டாள்நினைவைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாநகார்ய நிர்வாஹகரான உத்தமநம்பிக்கு ஸர்வஸ்வமென கட்டளையிட்டு அப்பொழுது தாம்அமுதுசெய்த அக்காரவடிசிலை ஸகலபரிஜநபரிவாரங்களுடன் அவரைக்கொண்டு ஆழ்வான்திருமாளிகைக்கு அனுப்பியருள, இவரும் இதனை அறிந்துபதறிஎழுந்துஎதிர்கொண்டு பகவத்ப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமதுதேவியாருக்குமாக இரண்டுதிரளை

களை எடுத்துக்கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவிட்டு ஸர்வஜ்ஞனான பகவானுடைய வரம்புகடந்த கருணைத்திறத்தை வியந்து அந்தஅடிசிலில் ஒருபகுதியைத் தாம்அமுதுசெய்து மற்றதைத் தேவியாருக்குக்கொடுத்தருள, முன்பு தஶரதசக்ரவர்த்திக்குப் புத்ரகாமேஷ்டியிற்கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராமலக்ஷ்மணபரதஶத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் 'ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேத வ்யாஸபட்டர்' என்ற இரண்டுதிருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு இத்திரளைகளிரண்டுமே ஹேதுவானபடியால் எம்பெருமானுடைய ஸந்தாநஸங்க்ரஹத்துக்கு ஆழ்வான் ப்ரயோஜகருமாவர்.

ரு. தர்ஶநஸ்தாபநத்துக்காகத் தம்கண்களையும் இழந்தனராதலால் த்ருடாத்யவஸாயஶாலிகளில் தலைவர்.

சு. விஷ்ணுத்வேஷியானசோழன் விஷ்ணுப்ரதிமைகளை எடுத்தெறிவதாக நினைத்தவளவிலே அவனுக்கு இஷ்டரானவர்கள் "ஶாஸ்த்ரமாக ப்ரதிஷ்டைசெய்யப்பட்ட பகவத்ப்ரதிமைகளை அழியச்செய்தால் உனக்குப் பெருந்தீங்கு வரும்" என்று சோழனிடம்சொல்ல; அதுகேட்ட சோழன் "அந்த ப்ரதிமைகளில் தெய்வத்தை உத்வாஸநம்பண்ணி அழியச்செய்வோம்" என்றுமுயன்று ஒருபார்ப்பானுக்குப் பணங்கள்கொடுத்து "நீ ஸுத்ரஶ்யாஞ்ஜநமிட்டுக்கொண்டு உத்வாஸநம் பண்ணு" என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் உகந்தருளின நிலங்களிலேபோய் ஸுத்ரஶ்யாஞ்ஜநமிட்டுக்கொண்டு உத்வாஸநம்பண்ணி பகவத்விக்ரஹங்களைக் கடலிலே எடுத்தெறிகிற வ்ருத்தாந்தத்தை எம்பெருமானார் திருச்செவிசாத்தி, "நாம் நெடுநாளாகக் கோயிலைவிடாதே நோக்கிக்கொண்டுபோருகிறோம் இவ்விடத்துக்கும் அழிவுவரும்படி ஶைவஸமயம் மேலிடாநின்றது; மேல் செய்யவேண்டுவதென்?" என்று பெரியநம்பிக்கு அறிவிக்க, "நான் பெருமாளுடைய திருவெல்லையிலே ஒருப்ரதக்ஷிணம் வரும்படியாக உம்முடைய ஶிஷ்யர்களில் ஒருவரை என்பின்னே வரவிடவேணும்; என்பின்னே வாராநின்றால் 'ஒருவன்பின்னே போகிறோம்' என்று தன்னெஞ்சில் படாதே நிழல்போலே என்னைப்பின்செல்வானொருவனாகவேணும்" என்று பெரியநம்பி திருவாய்மலர்ந்தருள, "அதுக்கு ஆவார்ஆர்?" என்றுஎம்பெருமானார்

சிறிதுயோசிக்கிறவளவிலே "கூரத்தாழ்வானைவரவிடலாகாதோ!"
என்று நம்பி நியமித்தருள அருகிலிருந்தஆழ்வான் இதைக்கேட்டு
"நம் ஸ்வரூபத்தின் உண்மையை நம்பி இங்ஙனே அறிந்து பலரடி
யார்முன்பு அருளப்பெற்றோமே!" என்று மஹாநந்தமடைந்து
நம்பியைப் பின்சென்றார் என்ற ஐதிஹ்யத்தை "பலரடியார்முன்ப
ருளிய பாம்பணையப்பனமர்ந்துறையும்" என்றபாசுரத்தின் ஈட்டி
லே ஸேவிக்கும்போது "அநந்யஸாத்யமான இந்த ஸூக்ஷ்மார்த்த
விசேஷம் இவ்விருள்தருமாஞாலத்திலே இவ்வாழ்வானொருவர்க்
கே அமைந்தபடியென்!" என்றுநெடும்போது கண்ணுங்கண்ணீரு
மாயிருந்து விக்கிவிக்கி விஸ்ராயருளினார் அழகியமணவாளச்சீயர்
ஆகையால் ஸூக்ஷ்மார்த்தவிவரணத்தில் ஆழ்வான் ஒப்புயர்
வற்றவர்.

எ. ஆழ்வான் உடையவர்திருவடிகளில் ஆஸ்ரயிப்பதற்கு
முன்பு நிரவதிகஸம்பத்ஸம்ருத்தராய்க் கூரமாநகரிலே எழுந்தருளி
யிருக்குங்காலத்திலே பெருமாள்கோயிலிலெம்பெருமான்களுக்கு
எவ்வளவு விபவமாக மஹோத்ஸவங்கள் நடந்தபோதிலும் தாம்
அவ்விடத்துக்கு எழுந்தருளாமல் ஸ்வதேசத்திலே விசேஷமாக
ததீயஸத்காரம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க, பேரருளா
ளனுடைய ப்ரஹ்மோத்ஸவஸேவார்த்தமாக உத்தரதேசத்தில் நெ
டுந்தூரத்தில்நின்றும் வந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூரத்திலே
ஆழ்வான் திருமாளிகையிலே ததீயாராதநம் ஸ்வீகரித்துப் பேரரு
ளாளன் ஸந்நிதிக்குப்புறப்பட, ப்ரஹ்மோத்ஸவத்தினன்றும் ஆழ்
வான் பெருமாள்கோயிலுக் கெழுந்தருளாதிருக்கக்கண்ட இவர்கள்
"ஆயிரம் பதினாயிரம் செலவழித்துக் காதம்பலவுந்திரிந்துழன்று
வந்து பல்லாயிரம்பேர்கள் ஸேவித்துப்போருகிற இந்தமஹோத்
ஸவத்தை ஸேவியாமல்தன்மாளிகையையே காத்துக்கொண்டிருக்
கிறாரே ஆழ்வான்" என்றிப்படி இழிவாகச் சிலஎண்ணங்கள் எண்
ணிக்கொண்டு பெருமாள்கோயிலுக்கு வந்தவளவிலே அவ்விடத்
தில் இவர்களுக்குப் பேரருளாளன் ஸேவைஸாதியாதொழிய,
"இதென்ன ஆஸ்சர்யம்" என்று இவர்கள் ஆலோசித்துக்கிட
க்க, பின்புபெருமாள் ஸ்வப்நமுகேந "ஆழ்வான் திருவடிகளில்
நீங்கள் மாநஸமாக அபசாரப்பட்டீர்களாகையால் மீண்டு அவர்

திருவடிகளில் ஸேவித்துஅவரைப் பொறுப்பித்துக்கொண்டாலன்றி உங்கள்கண்ணுக்கு நான் இலக்காகமாட்டேன்'' என்றருளிச்செய்ய, உடனே அவர்கள் ஆழ்வான்திருவடிகளிற்சென்று வேரற்ற மரம்போலேவிழுந்து, முதலில் தாங்கள்எண்ணினபடியையும்பிறகு நடந்தபடியையும் விஜ்ஞாபித்துப் பலமுகமாக வெளாதும்பண்ணிப்ராயிக்க, ஆழ்வான் ஊநஷிதம்செய்தருளி, மறுபடியும் நீங்கள் பெருமாள்கோயிலுக்குச்செல்லுங்கள், பெருமாள்குளிரக்கடாக்ஷிப்பர்; மீண்டு நீங்கள் இவ்விடம்வரும்போது சிறியகாஞ்சீபுரத்தெருவில்நின்றும் ஒருபிடிமண்ணையும் பெரியகாஞ்சீபுரத் தெருவிலிருந்து ஒருபிடி மண்ணையும் கொண்டுவாருங்கள்'' என்றுநியமித்தனுப்ப, அவர்களும்போய்ப் பேருளாளனை ஸேவித்துவிட்டு இரண்டுபிடிமண் கொண்டுவர, ஆழ்வான் தங்கத்தட்டில் ஒருபிடி மண்ணையும் வெள்ளித்தட்டில் மற்றொருபிடிமண்ணையும் வாங்கிக்கொண்டவளவிலே அவை ஸாளக்ராமசிலைகளும் ஸ்படிகலிங்கங்களுமாய்த்தோற்ற, அந்த உத்தரதேஶிகள் அதைக்கண்டு ''இதென்ன ஆச்சரியம்'' என்று விஸ்மயப்பட்டார்கள். என்றஒரு ஐதிஹ்யம் சொல்லப்பட்டுவருகையாலே இவருடைய நிஷ்டாவிஶேஷம் வாவாஜொவாம்.

அ. ஆழ்வான் வைபவத்திற்காட்டிலும் அவர்தேவியாரான ஆண்டாள்வைபவம் அபாரமாயிருக்கும். ஶாஸ்த்ரார்த்தங்களில் தமக்கு ஏதாவது ஸம்ஶயங்கள் தோன்றினால் தேவியாரைக்கேட்டு ஶமிப்பித்துக்கொள்வது வழக்கமென்று ப்ரஸித்தம்.

ஆழ்வான் முதலிலே கூரமாநகரிலே ராஜ்யபரிபாலநம்செய்துகொண்டிருக்கையில் இராக்காலத்தில் நகரஸஞ்சாரம் செய்துகொண்டு போருகையில் ஒருநாள் இரவில் ஒருதிருமாளிகையில் (சுயம்வாதிரக்குமேல்) வார்த்தையொலிகள் கேட்க, ஆழ்வான் ரஹஸ்யமாக இருந்து அப்பேச்சுகளை அவதாநியாநிற்க, அத்திருமாளிகையில் தலைவர்க்கு ஒருமகளிருப்பதாகவும், அவளுக்கு விவாஹமானால் உடனே கணவன் இறந்தொழிவனென்று ஜாதகத்திலிருப்பதாகவும், இதனைஅனைவருமறிந்து இவளை ஒருவரும் மணம்புரியாமையாலே வயதுசென்ற இவளை இனி நாம் வீட்டில் வைத்துக்

கொண்டிருந்தால் லோகாபவாதம்விளையும்; ஆகையால் இவளை உயிர்மாய்ப்பதே உரியஉபாயமென்று சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டு ஆழ்வான், திருமாளிகைக்கெழுந்தருளி மறுநாள் அவர்களை ராஜஸபையில் வரவழைத்து "நேற்றிரவு உங்கள் வீட்டில் வார்த்தையாடின விஷயங்களைச்சொல்லவேணும்'' என்றுகேட்க, அவர்கள் உள்ளபடிசொல்ல, ஆழ்வான் அதுகேட்டு "ப்ரஜைகளுடைய வருத்தத்தைத்தீர்ப்பது அரசர்க்குக் கடமையாகையால் உங்கள்பெண்ணை நான்மணந்துகொண்டால் உங்கள் வருத்தம்தீருமன்றோ? அப்படிசெய்யலாமோ?'' என்ன; அவர்கள் 'ஆ! இப்படியுண்டா? அப்பெண்ணை தேவரீர் மணம்புரிந்தால் அவளுடைய ஜாதகத்தின்படி தேவரீருக்கு ப்ராணாபாயம் ஸித்திக்குமே; பிறகுஇந்நாடு அராஜகமாயொழியுமே: நாங்களும் புகலற்றுத் தடுமாறுவோமே; என்றுகூற, அதுகேட்டு ஆழ்வான் "அப்படியன்று; அவளிடத்தில் நாம்சிற்றின்பத்தை விரும்பினாலன்றோ நமக்கு அப்படிப்பட்ட தீங்குவிளைவது; நமக்கு அதில் விருப்பமில்லை; இருவரும் சுகமேவாழ்வோம், ஆகையாலே தாரைவார்த்துக்கொடுங்கள்'' என்றுசொல்லி அம்மகளை மணம்புரிந்துகொள்ள அவளும் சிற்றின்பத்தில் சிறிதும் நெஞ்சுசெல்லாதவளாய் ஜ்ஞாநபக்திவைராக்யங்கள் நாள்தோறும் வளரப்பெற்று "ஆண்டாள்'' என்றதிருநாமத்தை ஸார்த்தமாக்கிக்கொண்டு எழுந்தருளியிருந்ததாக ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயம் வாசாமகோசரம்.

"ஶ்ரீவத்ஸாங்கவிபோஶ்சரித்ரமமலம் ஸம்க்ஷேபதோ ஜ்ஞானதம்
ஸர்வேஷாமகநாஶநம் ஸுககரம் மோக்ஷப்ரதம் தீமதாம்।
யே ஶ்ருண்வந்தி படந்தி ஸௌஹ்ருத்யயா ஸத்ருஷ்டி ஸஹிதா:
தே கச்சந்தி பரம்பதம் ப்ரவிஶ்ய விஷ்ணோரவ்யயம் ஶாஶ்வதம்॥

இங்ஙனே ஆழ்வான் வைபவத்தை அணுமாத்ரம்

அநுபவிக்கப் பெற்ற யானே தவஞ்செய்தேன்.

ஸ்ரீரங்கநாயகபதே ஶரணம் ப்ரபத்யே।

ஆழ்வான் வைபவம் முற்றிற்று.

---

விக்டோரியா ராயல்பிரஸ்; பெரியகாஞ்சீபுரம்.

# விளம்பரம்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்த பஞ்சஸ்தவமென்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீவைகுண்டஸ்தவம், அதிமாநுஷஸ்தவம், ஸுந்தரபாஹு ஸ்தவம், வரதராஜஸ்தவம், ஸ்ரீஸ்தவம் என்கிற ஐந்துஸ்தோத்ரங் களுக்கு ஸ்ரீ. உ. வே. பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால் எழுதப்பட்ட மணிப்ரவாள வியாக்கியானம் அச்சிடப்பட்டு வருகிறது. [வியாக்கியானத்தின் விவரம்:—]ப்ரதிபதார்த்தம், தாத்பர்யார்த்தம், விசேஷார்த்தம், அரிய பிரயோகங்களின் பரிஷ்காரம்.

ஷை வியாக்கியானத்துடன் வரதராஜஸ்தவமும் ஸ்ரீஸ்தவமும் இப்போது அச்சாகி வருகிறது. வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாஸத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் விலை 1—0—0

விலாஸம்

K. சுப்பிரமண்ய அய்யர்,

விக்டோரியா ராயல் பிரஸ்,
No 79, நெல்லுக்காரத்தெருவு.
பெரியகாஞ்சிபுரம்.